DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**STC. No. 682/2025**

**eposition of LW1 examined as PW1** Dt. 24.03.2026

| | |
|---|---|
| Name | அஞ்சம்மாள் |
| Husband's Name | முருகேசன் |
| Village | அன்னியூர் |
| Taluk | குடவாசல் |
| Age | 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 24.03.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஏற்கனவே எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடம் வாங்கி கொடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்தது. இந்நிலையில் தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2025 ம் ஆண்டு ஒரு நாள் நான் அங்காடிக்கு சென்று அரிசி வாங்கிவிட்டுஅன்னியூர் மெயின்ரோட்டில் உள்ள பன்னீர்செல்வம் என்பவரின் வீட்டருகே வந்து கொண்டிருந்த போது அவர் வீட்டின் முன்பாக யாரோ சிலர் கூட்டமாக சண்டையிட்டு கொண்டிருந்தனர். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்ததில் உள்காயம் ஏற்பட்டது. எதிரி மீது முன்விரோதம் இருந்த காரணத்தால் ஆஜர் எதிரிதான் தாக்கி இருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் மீது இருந்த கோபத்தில் மிகைப்படுத்தி எதிரி என்னை திட்டி கையால் தாக்கியதாக புகார் கொடுத்துவிட்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரி அங்கு இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

அஞ்சம்மாள்

24/3/26

அரசுதரப்பு குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். எதிரியுடன் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 25.02.2025-ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் நான் அங்காடிக்கு சென்று அரிசி வாங்கிவிட்டுஅன்னியூர் மெயின்ரோட்டில் உள்ள பன்னீர்செல்வம் என்பவரின் வீட்டருகே வந்து கொண்டிருந்த போது அவர் வீட்டு வாசலில் உட்காரிருந்த ஆஜர் எதிரிதான் ஏற்கனவே இடம் வாங்கி கொடுத்த பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு என்னை தேவிடியா, குச்சிக்காரி என அசிங்கமாக திட்டி கன்னத்திலும் கழுத்திலும் அடித்ததில் எனக்கு உள்காயம் ஏற்பட்டதாகவும் இது தொடர்பாக பாலையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்பொழுது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் எதிரிக்கு ஆதரவாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

அஞ்சம்மா

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. [signature] 24/3/25
நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை